நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வானூர்

முன்னிலை:- திருமதி.N.பீரித்தி, B.A.,B.L.

குற்றவியல் நீதித்துறை நடுவர்

வானூர்.

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் திங்கட்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 35/2015

C.N.R.No.TNVP12000065-2015

அரசுக்காக.
காவல் உதவி ஆய்வாளர்,
கிளியனூர் காவல் நிலையம்,
குற்ற எண்.273/2014 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

| | |
|---|---|
| எதிரி.1. | பலராமன் (43/2014) த/பெ.நாராயணசாமி |
| எதிரி.2. | மகேந்திரன் (30/2014) த/பெ. சந்திரசேகர் (எதிரிகள் இருவரும் தைலாபுரம் கிராமம், வானூர் வட்டம்) |

...... எதிரிகள்

CASE SUMMARY

| S.No. | Particulars | Report |
|---|---|---|
| 1. | The period of remand of the accused | A1 and A2 Anticipatory Bail on 12-08-2014 and Surrendered on Bail 13-08-2014 |
| 2. | The date of filing of the complaint/final report in the Court | Date of filing final report on 27-05-2015 Taken Cognizance on 27-05-2015 |
| 3. | The date of committal of the case to the Court of Session | Not Applicable |
| 4. | The date of 1st questioning of the accused under Sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | Accused questioned on 04-08-2015 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challange before superior courts: except routine petitions like petitions under section 317 of the | Nil |

| | | |
|---|---|---|
| | Code: | |
| 6. | Date of examination in – Chief and cross – Examination of a Witness | P.W.1 - Chief and cross Examined on 06-04-2023<br>P.W.2 - Chief and Cross Examined on 06-04-2023<br>P.W.3 - Chief and cross Examined on 29-08-2023<br>P.W.4 - Chief Examined on 26-10-2023<br>P.W.5 - Chief and cross Examined on 18-09-2025<br>P.W.6 - Chief and Cross Examined on 06-01-2026<br>P.W.7 - Chief and Cross Examined on 03-02-2026<br>P.W.8 - Chief and Cross Examined on 26-02-2026 |
| 7. | Date of examination of the accused U/Sec.313 of the Code | 02-03-2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance / production, as the case may be ; and NBW pending/recalled | Nil |
| 9. | Grant of stay by superior Courts and the results thereof | Nil |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 27/05/2015-ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அது முதல் இந்நீதிமன்றத்தில் கவனமாக பரிசீலனையில் இருந்து வந்து குற்றம் முறையிடுவோர் தரப்பில் அரசு உதவி குற்ற வழக்கு நடத்துனர் நிலை 1 திரு.ராஜசேகர் அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.திருவேங்கடம் அவர்கள் முன்னிலையாகியும், இன்று இறுதி விசாரணைக்கு வந்து இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்து ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீர்ப்புரை

### அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம்

21/06/2014ம் தேதி காலை 09:00 மணிக்கு தைலாபுரம் தெய்வசிகாமணி என்பவரின் சவுக்கு நிலம் அருகில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் முன்விரோதம் காரணமாக சாட்சி-1ன் நிலத்திலிருந்த சவுக்கு மரங்களை வெட்டவே ஏன்

மரங்களை வெட்டுகிறீர்கள் என்று கேட்ட 1, 2 சாட்சிகளை எதிரிகள் தேவிடியா பசங்களா ஒக்கால ஒழிங்களா என்று சவுக்கு தடியால் மாறி மாறி அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி நீங்க இந்த ஊரிலேயே வாழமுடியாது இருவரையும் வெட்டி வீழ்த்திடுவோம் என்று மிரட்டியதாக 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் கிளியனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஒரு குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையான பிறகு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் நகல்களும் குவிமுச 207 பிரிவின் கீழ் முறையாக இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவியபோது, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றத்தினை மறுத்தனர். எனவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் குற்றச்சாட்டு வனைவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்த காரணத்தினால், 1, 2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின படி குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கி கூறி வினவியபோதும், எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்காட விருப்பம் தெரிவித்தனர். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 10 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அதில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. பட்டியல் சாட்சிகளில் பெருமாள் கிராமணி என்பவர் சாட்சியம் அளிக்கும் நிலையில் இல்லை என்று அரசு தரப்பில் அவரது மருத்துவ சான்றிதழ் இணைத்து ஒரு அறிக்கை தாக்கல் செய்ததன்பேரில் மேற்படி

பெருமாள்கிராமாணி என்பவர் விசாரிக்காமல் விலக்கி கொள்ளப்பட்டார். சுப்பிரமணி த/பெ.கோபால் கவுண்டர் என்பவர் இறந்துவிட்டார். சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) <u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>

21/06/2014ம் தேதி காலை 09:00 மணிக்கு தைலாபுரம் தெய்வசிகாமணி என்பவரின் சவுக்கு நிலம் அருகில் இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் முன்விரோதம் காரணமாக சாட்சி-1ன் நிலத்திலிருந்த சவுக்கு மரங்களை வெட்டவே ஏன் மரங்களை வெட்டுகிறீர்கள் என்று கேட்ட 1, 2 சாட்சிகளை எதிரிகள் தேவிடியா பசங்களா ஒக்கால ஓழிங்களா என்று சவுக்கு தடியால் மாறி மாறி அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தி நீங்க இந்த ஊரிலேயே வாழமுடியாது இருவரையும் வெட்டி வீழ்த்திடுவோம் என்று மிரட்டியுள்ளனர்.

6) அதை தொடர்ந்து 24/06/2014ம் தேதி திரு.தெய்வசிகாமணி, த/பெ.கோவிந்தசாமி நாயக்கர், தைலாபுரம், வானூர் வட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.1 புகாரை நிலைய பொறுப்பில் இருந்த திரு.தேவேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் பெற்று காவல் நிலைய குற்ற எண்.273/2014 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2)-ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 பதிவு செய்தார். பின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சுந்தரவேல் மற்றும் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.7 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 தயார் செய்தார். இவ்வழக்கில் தெய்வசிகாமணி, ரவிச்சந்திரன், பெருமாள் கிராமணி, அய்யப்பன், சுப்பிரமணி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த தெய்வசிகாமணி மற்றும் ரவிச்சந்திரன் என்பவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரவிச்சந்திரன் என்பவரை

விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து தெய்வசிகாமணி மற்றும் ரவிச்சந்திரன் என்பவர்களின் காயச்சான்றுகள் முறையே அ.சா.ஆ.4 அ.சா.ஆ.3ஐ பெற்றார். இவ்வழக்கின் எதிரிகள் மேன்மைமிகு விழுப்புரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று இந்நீதிமன்றத்தில் சரணடைந்தனர். இவ்வழக்கில் விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

7) இவ்வழக்கில் புகார்தாரர் திரு.தெய்வசிகாமணி, அ.சா.1 ஆகவும், திரு.ரவிச்சந்திரன் அ.சா.2 ஆகவும், திருமதி.சுந்தரவேல் அ.சா.3 ஆகவும், திரு.அய்யப்பன் அ.சா.4 ஆகவும், மருத்துவர் ரவிச்சந்திரன் அ.சா.5 ஆகவும், திரு.குணசேரகன் அ.சா.6 ஆகவும், திரு.தேவேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.7 ஆகவும், திருமதி.கீதா, காவல் ஆய்வாளர் அ.சா.8 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

8) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக அமைந்த அரசு தரப்பு சாட்சிய பகுதிகளை எடுத்துரைத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் சுட்டிக்காட்டி வினவியபோதும் எதிரிகள் அரசு தரப்பு சாட்சி கூறுவதை மறுத்து, தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் யாரும் இல்லை என்று கூறினார்கள். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

9) இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

10) முதலாவதாக எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான 294(பி) இ.த.ச. பிரிவை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்பதை அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சிகளை வைத்து பார்க்கும்பொழுது,

> 294(பி) இ.த.ச. என்பது பொது இடத்தில் ஆபாசமான வார்த்தைகளை மற்றவர்களுக்கு எரிச்சலூட்டுகின்ற வகையில் உச்சரித்தல் ஆகும்.

புகார்தாரரான திரு.தெய்வசிகாமணி தனது புகாரில் "எனது தகப்பனார் 1960ல் கிரையம் பெற்று அன்று முதல் இன்று வரை அனுபவம் செய்து வரும் எங்களது நிலத்தில் சவுக்கு கன்று வைத்து அதற்கன பராமரிப்பு நானே செய்து வரும் நிலையில் எங்களது சவுக்கு மரத்தை இன்று 21/06/2014 முற்பகல் 09:00 மணிக்கு இதே ஊரைச் சேர்ந்த நாராயணசாமி மகன் பலராமன் மற்றும் சந்திரசேகர் மகன் மகேந்திரன் இவர்கள் இருவரும் வெட்டினார்கள். அதனை கேட்டதற்கு அசிங்கமாக அறுவெறுப்பான வார்த்தைகள் கூறினார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

11) அவர் அ.சா.1 ஆக சாட்சியமளிக்கையில் தன்னையும் தனது மகனையும் எதிரிகள் அசிங்கமாக திட்டியதாக புகாரை ஒத்து சாட்சியமளிக்கவில்லை. அ.சா.1ன் மகனும் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2ம் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார். இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 அவரது சாட்சியத்தில் அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் என்ன தகராறு நடந்தது என்பது தெரியாது என்றும், தான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் சொல்லப்படும் பெருமாள் கிராமணி என்பவர் சாட்சியம் அளிக்கும் நிலையில் இல்லை என்று அரசு தரப்பில் அவரது மருத்துவ சான்றிதழ் இணைத்து ஒரு அறிக்கை தாக்கல் செய்ததன்பேரில் மேற்படி பெருமாள்கிராமாணி என்பவர் விசாரிக்கப்படவில்லை. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான சுப்பரமணி என்பவர் இறந்துவிட்ட காரணத்தினால் அவரையும் விசாரிக்கவில்லை. புகார்தாரரான அ.சா.1, சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2 மற்றும் இவ்வழக்கில் முக்கிய சாட்சியான சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.4ம் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக அ.சா.1 கொடுத்த புகாரை ஒத்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

12) அரசு தரப்பில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக குற்றம் சாட்டப்பட்டிருப்பினும் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் அவ்வாறு ஒத்துரைத்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 294(பி)-ன் படியான குற்றச்சாட்டை அரசு தரப்பு சரிவர நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13) இரண்டாவதாக 1 மற்றும் 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டான பிரிவு 324 இதசவை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்பதை அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சிகளை வைத்து பார்க்கும்பொழுது,

324 இ.த.ச. என்பது ஒருவரை ஆயுதங்களால் தன்னிச்சையாக தாக்கி சொற்பகாயத்தை ஏற்படுத்தும் செயலைப்புரிதல் ஆகும்.

இவ்வழக்கின் புகார்தாரர் தனது புகாரில் "எனது தகப்பனார் 1960ல் கிரையம் பெற்று அன்று முதல் இன்று வரை அனுபவம் செய்து வரும் எங்களது நிலத்தில் சவுக்கு கன்று வைத்து அதற்கான பராமரிப்பு நானே செய்து வரும் நிலையில் எங்களது சவுக்கு மரத்தை இன்று 21/06/2014 முற்பகல் 09:00 மணிக்கு இதே ஊரைச் சேர்ந்த நாராயணசாமி மகன் பலராமன் மற்றும் சந்திரசேகர் மகன் மகேந்திரன் இவர்கள் இருவரும் வெட்டினார்கள். அதனை கேட்டதற்கு அசிங்கமாக அறுவெறுப்பான வார்த்தைகள் கூறி என்னையும் எனது மகன் ரவிச்சந்திரன் என்பவரை சவுக்கை தடியால் அடித்துவிட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

14) அவர் அ.சா.1 ஆக சாட்சியமளிக்கையில் 2014ம் ஆண்டு சவுக்கு மரம் வெட்டியபோது 21/04/2014ம் தேதி 11:00 மணியளவில் 30, 40 ஆட்களை வைத்து இவ்வழக்கின் எதிரிகள் 20 டன் சவுக்கையை அவர்கள் நிலத்தின் ஓரமாக இருந்ததை வெட்டி விட்டதாகவும், தான் சென்று மறித்ததாகவும்,

எதிரிகள் இருவரும் அப்போது தன்னையும், ரவிச்சந்திரன் என்பவரையும் சவுக்கு தடியால் அடித்துவிட்டதாகவும், தன்னை முதுகு மற்றும் தலையில் அடித்தார்கள் என்று புகாரை ஒத்து சாட்சியமளித்துள்ளார். சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.1ன் மகன் அ.சா.2ம் அ.சா.1ன் சாட்சியத்தை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

15) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 அவரது சாட்சியத்தில் அ.சா.1ன் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் என்ன தகராறு நடந்தது என்பது தெரியாது என்றும், தான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகயாக அரசு தரப்பில் சொல்லப்படும் பெருமாள் கிராமணி என்பவர் சாட்சியம் அளிக்கும் நிலையில் இல்லை என்று அரசு தரப்பில் அவரது மருத்துவ சான்றிதழ் இணைத்து ஒரு அறிக்கை தாக்கல் செய்ததன்பேரில் மேற்படி பெருமாள்கிராமாணி என்பவர் விசாரிக்கப்படவில்லை. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான சுப்பரமணி என்பவர் இறந்துவிட்ட காரணத்தினால் அவரையும் விசாரிக்கவில்லை.

16) புலன்விசாரணை அதிகாரி தயார் செய்ததாக சொல்லப்படும் பார்வை மகசரின் சாட்சிகளாக கையொப்பம் செய்த அ.சா.3 அவரது சாட்சியத்தில் கடந்த 2014ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை என்றும், தனது நண்பர் ரவி என்பவரின் நிலத்திற்கு சென்றபோது போலீசார் வரைபடம் வரைந்திருந்தார்கள் என்றும், பேப்பரில் எழுதி எடுத்து வந்து தன்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் நடந்த சண்டை சம்மந்தமாக வந்துள்ளதாக போலீசார் தெரிவித்தனர் என்று சாட்சியமளித்துவிட்டு அவரது குறுக்கு விசாரணையில் ‘‘நான் இருப்பது ஈச்சங்காடு. அ.சா.1, 2 வசிப்பது தைலாபுரம் கிராமம் ஆகும். சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக தெரியாது. சம்பவம் நடந்த மறுநாள் சம்பவ இடம் சென்றபோது போலீசார் வந்திருந்தனர். போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்ற தாளில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்கு

தெரியாது'' என்று முதன்மை விசாணையிலிருந்து முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார்.

17) அ.சா.1 மற்றும் அ.சா.2ற்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் ரவிச்சந்திரன் அ.சா.5 ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் அ.சா.1 மற்றும் அ.சா.2ற்கு சிகிச்சை வழங்கி அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்றுகள் வழங்கியது தொடர்பாக சாட்சியமளித்துள்ளார். மேலும் அவரது குறுக்கு விசாரணையில் ஒருவர் தகுந்த வேகத்தோடு கரடான சமதளத்தில் விழுந்தாலும் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது என்று சாட்சியமளித்துள்ளார்.

18) இவ்வழக்கில் புலனாய்வு அதிகாரி தயார் செய்ததாக சொல்லப்படும் பார்வை மகசர் சாட்சியாக இருந்த அ.சா.6 அவரது சாட்சியத்தில் போலீசார் கேட்டுகொண்டதன்பேரில் பார்வை மகசரில் தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றும், வழக்கு குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று முதன்மை விசாரணையில் சாட்சியமளித்துள்ளார். அவரது குறுக்கு விசாரணையில் தான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் நிலம் அளந்து வாக்குவாதம் ஏற்படும் வரை தான் இருந்தேன் என்றும், சண்டை நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் தான் அங்கு இருக்கவில்லை என்று அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளார்.

19) அ.சா.1 முதல் அ.சா.8 வரையான சாட்சிகளில் முக்கிய சாட்சிகளாக கருதப்படும் அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 முதல் அ.சா.6 ஆகியோர்களில் அ.சா.1 மற்றும் அ.சா.2 தந்தை மகன் ஆவர். அவர்கள் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ தாக்கியதாக சாட்சியமளித்துள்ள போதிலும் தனிநபர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.3, ஆ.சா.6 சாட்சிகள் அரசு தரப்பிற்கு பிறழ்ந்து சாட்சியமளித்துள்ளனர். அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் ரவிச்சந்திரன் 01:05 மணிக்கு சிகிச்சை பெற்று 45 நிமிடங்கள் கழித்துதான் தெய்வசிகாமணி 01:50 மணிக்கு சிகிச்சைக்கு வந்தவர்களுக்கு பரிசோதனை செய்து சிகிச்சை வழங்கியதாக சாட்சியமளித்துள்ள போதிலும்

அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு ஏற்பட்ட காயத்திற்கு 1 மற்றும் 2 எதிரிகள்தான் காரணம் என்பதை அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் 1, 2 எதிரிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டான 324 இதச பிரிவின் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு சரிவர நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20) முடிவாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டான சட்டப்பிரிவு 506(ii) இதச பிரிவை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்பதை பார்க்கும்பொழுது, 506(ii) இ.த.ச. என்பது கொலை மிரட்டல் விடுத்து அதன்பேரில் உயிருக்கு பயம் ஏற்படுதல் ஆகும்.

21) அ.சா.1 அவரது புகாரில் எதிரிகள் இந்த ஊரிலியே நீ குடியிருக்க முடியாதென்றும தங்கள் இருவரையும் வெட்டி வீழ்த்திவிடுவேன் என்று கூறியதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் அ.சா.1 ஆக சாட்சியமளிக்கையில் புகாரை ஒத்து சாட்சியமளிக்கவில்லை. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரான அ.சா.2ம் எதிரிகள் தங்க ளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சாட்சியம் ஏதம் அளிக்கவில்லை. கண்ணுற்ற சாட்சியான அ.சா.4, ஏதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா..4 சாட்சிகள் அவர்களது நீதிமன்ற சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ அல்லது அந்த கொலைமிரட்டலினால் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு உயிர்பயம் ஏற்பட்டதாகவோ சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ அ.சா.1 தனது புகாரில் குறிப்பிட்டுள்ளதுபோல் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு சாட்சிகள் ஒத்து சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவு 506(ii)-ன்

படியான குற்றச்சாட்டை அரசு தரப்பு சரிவர நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

22) எனவே எதிரிகள் மீதான 506(2) இதச குற்றச்சாட்டு அரசு தரப்பில் போதுமான சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக**

23) மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு, அரசு தரப்பில் இவ்வழக்கினை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக முடிவு செய்து, எதிரிகள் மீது பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதசவின் கீழான குற்றச்சாட்டுக்களை ஐயம்திரிபற அரசு தரப்பு நிரூபிக்கவில்லை என தீர்மானித்து, எதிரிகளை மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து எதிரிகளை கு.வி.மு.ச.248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

24) இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் கைப்பற்றப்படவில்லை என்பதால் சொத்து குறித்து உத்தரவு இல்லை.

25) எதிரிகள் ஏற்கனவே பிணையிலிருந்து வந்துள்ள நிலையில், மேல்முறையிட்டு காலத்திற்குள் யாரும் இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யவில்லை எனில் மேல் முறையிட்டு காலத்திற்கு பிறகு எதிரியின் பிணைப்பத்திரம் ரத்து செய்திடவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பு முழுவதும் என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.03.18 10:29:41 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வானூர்.

பின் இணைப்பு -

அரசுத்தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.தெய்வசிகாமணி |
| அ.சா.2 | திரு.ரவிச்சந்திரன் |
| அ.சா.3 | திரு.சுந்தரவேல் |
| அ.சா.4 | திரு.அய்யப்பன் |
| அ.சா.5 | மருத்துவர் ரவிச்சந்திரன் |
| அ.சா.6 | திரு.குணசேகரன் |
| அ.சா.7 | திரு.தேவேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் |
| அ.சா.8 | திருமதி.கீதா, காவல் ஆய்வாளர் |

அரசுத்தரப்பு சாண்றாவணம்

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 24/06/2014 | புகார் |
| அ.சா.ஆ.2 | 24/06/2014 | பார்வை மகசரில் உள்ள அ.சா.3ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 03/07/2014 | அ.சா.2ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.4 | 03/07/2014 | அ.சா.1ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.5 | 24/06/2014 | பார்வை மகசரில் உள்ள அ.சா.6ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.6 | 24/06/2014 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | 24/06/2014 | பார்வை மகசர் |
| ஆ.சா.ஆ.8 | 24/06/2014 | மாதிரி வரைபடம் |

அரசுத்தரப்பு சான்று பொருள் - இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை.

N PREETHI

Digitally signed by N PREETHI
Date: 2026.03.18 10:29:30 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வானூர்.